இலங்கை கால நிலை நிதியம் (தனியார்) நிறுவனம்
ஆண்டறிக்கை

2020



உள்ளடக்கம்

01. பணிப்பாளர் சபை 30

02 அறிமுகம் 31

2.1. தூர நோக்கு 31

2.2. குறிப் பணி 31

2.3 நிறுவன ரீதியான நோக்கங்கள் 31

2.4 இலங்கை கால நிலை நிதியத்தின் பங்களிப்பு 32

03. நிறுவனத்தின் பயணப் போக் 35

04. சேவைகள் 36

4.1 பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு 36

4.1.1 பசுமை வீட்டு வாயு சரி பார்ப்புப் பிரிவின் வருடாந்த விருத்தி - 2020 36

4.2 இலங்கை காபன் கடன் பிரேரணை திட்டம் (SLCCS) 37

4.3 சுத்தப்படுத்துகை விருத்தி பொறிமுறை (CDM) 37

4.3.1 சுத்தப்படுத்துகை விருத்தி பொறிமுறையின் வருடாந்த விருத்தி 2020 38

4.4 நிகர பூச்சிய (Net Zero Energy) வலுச் சக்தி சான்றுபடுத்துகை 38

4.5 கால நிலை சாதகமான சான்றுபடுத்துகை 39

4.6 மதியுறை சேவைகள் 39

4.7 கருத்திட்டங்கள் மற்றும் நிதி முகாமைத்துவ கருத்திட்டங்கள் 40

05. எதிர்ப்பார்க்கப்படுகின்ற நிதி இலக்குகள் - 2020 41

06. நிதி விருத்தி 42

2020 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்த வாரான நிதி நிலைமைக் கூற்று 42

2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருட காலப் பகுதியில் இருந்தவாரான விபரமான வருமானக் கூற்று 44

2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியோட்ட கூற்று 45

2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிய நிதிக் கூற்று தொடர்பான விபரமான குறிப்பு 46

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி 50

01. பணிப்பாளர் சபை

தலைவரின் பகுப்பாய்வு

சுற்றாடல் அமைச்சுடன் கூட்டிணைந்த இலங்கை கால நிலை நிதியம் (தனியார்) நிறுவனத்துடன் தொடர்புடையதாகத் தயாரிக்கப்பட்ட 2020 ஆண்டறிக்கைக்கு இச் செய்தியை வெளியிடுவதில் பூரிப்படைகின்றேன். இலங்கையின் பேண்தகு அபிவிருத்தி விடயம் தொடர்பாக சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பேணுகை தொடர்பாக இந் நிறுவனத்தினால் 2020 ஆம் ஆண்டு கால கட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம், பசுமை வீட்டு வாயு உமிழ்வின் அளவை உண்மையாகக் கணிப்பிடுதல், இலங்கையில் காபன் கடன் பிரேரிப்புத் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கக் கூடிய புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி கருத்திட்டங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் சுற்றாடல் பயிற்சிப் பட்டறைகளின் முன்னெடுப்பு போன்ற விடயங்கள் முன்னுரிமை மிக்க செயற்பாடுகளாகக் காணப்படுகின்றன.

திரு வைத்தியர் அனில் ஜாசிங்க - தலைவர் (செயலாளர், சுற்றாடல் அமைச்சு)

இலங்கை கால நிலை நிதியம் (தனியார்) நிறுவனம், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் கூட்டிணைந்து இலங்கையின் பேண்தகு அபிவிருத்தியை உறுதி செய்யும் முகமாக சுற்றாடல் அமைச்சுடன் கூட்டிணைந்த வண்ணம் மிக முக்கியமான பல பணிகளை முன்னெடுத்த வண்ணமுள்ளது.

கலாநிதி திரு பீ. எம். எஸ். பட்டகொட - பணிப்பாளர் (திடல் நிபுணர்)

திரு சிரிபால அமரசிங்க - பணிப்பாளர் (தலைவர், மத்திய சுற்றாடல் அதிகார சபை)

திருமதி வீ. இரேஷா தில்ஹானி - பணிப்பாளர் (பணிப்பாளர், முகாமைத்துவக் கணக்கியல் பிரிவு, நிதி அமைச்சு)'

பணிக் குழு

இலங்கை கால நிலை நிதியம் (தனியார்) நிறுவனம் முறையே தலைவர், பிரதான நிறைவேற்று அதிகாரி, தொழில்நுட்ப மற்றூம் தொழில்நுட்பமற்ற உத்தியோகத்தர்களை உள்ளடக்கியதாகக் காணப்படும். தொழில் நுட்பக் குழு இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையினால் (SLAB) வழங்கப்பட்டுள்ள நிபுணத்துவத் தேவையை (ISO 14066) வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளது.

02 அறிமுகம்

இலங்கை கால நிலை நிதியம் (தனியார்) நிறுவனம், 2007 இன் இலக்கம் 07 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் 2008 ஏப்ரல் 09 ஆம் திகதி கம்பனி இலக்கம் பீ. வீ 63781 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட அரசுக்கு உரித்தான நிறுவனமொன்றாகக் காணப்படுகின்றது. இந் நிறுவனம் பிற்பாடு 2020 செப்டம்பர் 25 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் சுற்றாடல் அமைச்சின் விடயப் பரப்பினுள் உள்ளடக்கடுவதாக பிரசுரிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இலங்கை காபன் நிதியம் (தனியார்) நிறுவனம் எனும் பெயரில் அழைக்கப்பட்டதுடன், சுற்றாடல் சார்ந்த கருத்திட்டங்கள் தொடர்பாகக் காட்டிய பங்களிப்பு மற்றூம் விடயப் பரப்பை விஸ்தீரணப்படுத்தும் நோக்கில் 2016 ஜனவரி 29 ஆம் திகதியிலிருந்து இலங்கை கால நிலை நிதியம் (தனியார்) நிறுவனம் எனும் பெயரில் நிறுவனத்தின் பெயர் மாற்றத்துக்குட்படுத்தப்பட்டது.

இலங்கை கால நிலை நிதியத்தினால் அரச மற்றும் தனியார் பிரிவுகளுடன் தொடர்புடையதாக உள் நாட்டு ரீதியாகவும், வெளி நாட்டு ரீதியாகவும் பல பேண்தகு சுற்றாடல் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட வண்ணமுள்ளன. நிறுவனத்தின் முன்னுரிமை மிக்க நோக்கமாக காபன் உமிழ்வைக் கணிப்பிடுவதன் ஊடாகக் குறை காபன் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு வழங்கப்பட்ட வண்ணமுள்ளது. மேலும், அரச மற்றும் தனியார் பிரிவின் காபன் உமிழ்வு செயலாற்றுகையை வினைத் திறன் மிக்கதாக்கும் பொருட்டு வழிகாட்டும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளது.

2.1. தூர நோக்கு

காபன் பூச்சிய மற்றும் கால நிலையின் உண்மைத் தன்மையிலான பசுமை வீட்டு பொருளாதாரம்.

2.2. குறிப் பணி

காபன் குறைந்த மற்றும் கால நிலையின் உண்மைத் தன்மையிலான பசுமை வீட்டு அபிவிருத்தி தொடர்பாக இலங்கையருக்கு உதவுதல்.

2.3. நிறுவன ரீதியான நோக்கங்கள்

I. ஐக்கிய நாடுகளின் கால நிலை மாறுபாடுகள் தொடர்பான சட்டக இணக்கப்பாடு (UNFCCC) மற்றும் கியோதோ இணக்கப்பாட்டில் (Kyoto Protocol) உள்ளடக்கப்பட்டுள்ள சுத்தப்படுத்துகை அபிவிருத்திப் பொறிமுறை (Clean Development Mechanism – CDM) உள்ளடங்களான செயற்பாடுகளை செயற்படுத்துதல்.

II. சுத்தப்படுத்துகை அபிவிருத்தி பொறிமுறையுடன் தொடர்புடைய கருத்திட்டங்களை விருத்தி செய்யும் பொருட்டு தனியார், அரச மற்றும் அரச சார்பற்ற இயக்கங்களுக்கு மதியுறை சேவைகளை வழங்குதல், சுத்தப்படுத்துகை அபிவிருத்திப் பொறிமுறையுடன் தொடர்புடைய கருத்திட்டங்களை செல்லுபடியாக்கும் (Validation) மற்றும் உண்மைப்படுத்தும் (Verification) பொருட்டு தனியார் மற்றும் அரச நிறுவனங்களுக்கு வசதிகளை செய்து கொடுத்தல் மற்றும் பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைப்பதற்கு உறுதுணையாக அமையக் கூடிய கருத்திட்டங்களிற்கு நிதி வளங்களைக் கையளித்தல்.

III. சுத்தப்படுத்துகை மேம்படுத்துகை பொறிமுறையின் கீழ் சான்று படுத்தப்பட்ட பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைத்தல் (Certified Emission Reduction - CER) மற்றும் தன்னிச்சையான பொறிமுறையின் (Voluntary Mechanism) மூலம் சான்றுபடுத்தப்பட்ட பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைத்தல் (Verified Emission Reduction) மற்றும் காபன் வர்த்தகம்.

IV. சுற்றாடல் மதிப்பீடு உட்பட சுற்றாடல் உற்பத்திகளின் விற்பனை நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துதல்.

V. நிறுவன ரீதியான கருத்திட்டங்கள் மற்றும் உற்பத்தி மட்டத்திலான பசுமை வீட்டு வாயு உமிழ்வை அளவீடு செய்யும் பொருட்டும், உறுதிப்படுத்தும் பொருட்டும் செயற்படுதல்.

VI. சுற்றாடல் தர நிலைகளை மேம்படுத்தும் பொருட்டு ஆய்வு கூட வசதிகளை வழங்குதல்.

VII. சுற்றாடல் சார் சுற்றுலாப் பயணத் துறை உட்பட சுற்றாடல் உற்பத்தி விற்பனை நிகழ்ச்சிகளை விருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துதல்.

VIII. உயிரியல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை (Bio – prospecting programme) விருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துதல்.

IX. சுற்றாடல் நேயமிக்க கழிவகற்றல் நிகழ்ச்சிகளை விருத்தி செய்தல்.

X. வணிக ரீதியாக சாத்தியப்பாடுள்ள வைத்திய மற்றும் ஆபத்தான கழிவுகளை எரிக்கும் செயற்பாட்டை விருத்தி செய்தல் மற்றும் அவற்றைப் பராமரித்தல்.

XI. கருத்திட்ட விருத்தியாளர்களுக்குத் தேவையான எந்தவொரு உதவிச் சேவையையும் கையளித்தல்.

XII. சுற்றாடல் உற்பத்தி மற்றும் சேவை மேம்படுத்து நர்களுக்கு நியாயமாக நிபந்தனைகளின் கீழ் நிதியுதவியகளை வழங்குதல்.

XIII. சுற்றாடல் சேவைகள் மற்றும் சுற்றாடல் மாசாக்கம் தொடர்பாக பயன்படுத்துகை கட்டணத்தை அறவிடுதல் மற்றும் கிடைக்கின்ற நிதிப் பலன் களின் ஊடாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற கைத்தொழிலாளர்கள் மற்றும் வர்த்தகக் குழுக்களுக்கு சுற்றுச் சூழல் சார் சேவைகளை கையளித்தல்

XIV. பசுமை அறிக்கையிடல் (Green Reporting) செயற்பாட்டை விருத்தி செய்யும் பொருட்டு தனியார் நிறுவனங்களிற்கும், முகவராண்மை நிறுவனங்களிற்கும் உதவி வழங்குதல்.

XV. பேண்தகு அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக நிதியங்களை முதலீடு செய்தல்.

XVI. சுற்றாடலுடன் தொடர்புடைய எந்தவொரு வகையான சுற்றாடல் செயற்பாடுகளையும் செயற்படுத்துதல்.

XVII. இலங்கையை பசுமை பொருளாதாரம் (Green Economy) நோக்கி மாற்றீடு செய்யும் பொருட்டு தொடர்புடைய எந்தவொரு செயற் பணியையும் செயற்படுத்துதல்.

2.4 இலங்கை கால நிலை நிதியத்தின் பங்களிப்பு

இலங்கை கால நிலை நிதியம் (தனியார்) நிறுவனத்தின் நோக்கம் குறை காபன் வணிக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்வதாகக் காணப்படுகின்றது. அதன் கீழான முயற்சிகளின் வாயிலாக வினைத் திறன் மிக்க, குறைக் காபன் தீர்வுகள் தொடர்பாகக் காணப்படுகின்ற திறன் களை மேம்படுத்துவதும், புத்தாக்க உபாய வழிகளை ஆராய்ச்சி செய்வதும், காணப்படுகின்ற வசதிகளின் ஊடாக காபன் உமிழ்வை வினைத் திறன் மிக்கதாக்கும் பொருட்டு வழிகாட்டும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளது. அதன் பிரகாரம், கைத்தொழில்களைக் குறைத்த வண்ணம் அதன் எச்சங்களை மட்டுப்படுத்தி அந் நிறுவனங்களின் பேண்தகு வணிகப் பயன்பாடுகளை மேம்படுத்துவதற்கும், வர்த்தகங்களின் சுற்றாடல் சார் தராதர நிலைகளை மேம்படுத்துவதற்கும் தேவையான வசதிகள் ஏற்பாடு செய்யப்படும்.

இலங்கை கால நிலை நிதியம் (தனியார்) நிறுவனம் உள் நாட்டு வர்த்தக நிறுவனங்களிற்கு தராதர நிலைகளின் உண்மை சேவைகளை கையளித்த வண்ணம் அந் நிறுவனங்களிற்கு சர்வதேச சந்தையினுள் உட் பிரவேசிக்கும் வாய்ப்பை விஸ்தீரணப்படுத்தியுள்ளது. உலகலாவிய கால நிலை செயற்பாடுகளுக்கு இலங்கையின் பங்களிப்பின் ஊடாக அதன் வெளிப்படைத் தன்மையையும், பொறுப்புடைமையையும் வெளிக் காட்டுவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இலங்கை காபன் கடன் பிரேரிப்புத் திட்டத்தின் மூலம் காபன் வர்த்தகத்திற்கு வசதிகளை கையளிப்பதற்கும், கருத்திட்டங்களிற்கு காபன் வெளியகற்றும் கருத்திட்டம் தொடர்பாக முதலீடு செய்யக் கூடிய வாய்ப்பு கிடைப்பதும், அவ் வாயு உமிழ்வைத் தீர்க்கும் பொருட்டு மேடையொன்றை நிர்மாணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். இதன் ஊடாக சுற்றாடல் பொறுப்பு வகுதி விருத்தி செய்யப்படுவது மாத்திரமன்றி பேண்தகு எதிர்க்காலத்திற்கான பங்களிப்பும் வழங்கப்படும்.

இலங்கை கால நிலை நிதியம். தேசிய கால நிலைக்கு முகங் கொடுக்கும் திறனை உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டியாகவும் செயற்பட்ட வண்ணமுள்ளது. கைத்தொழில்களின் ஊடாக முழு மொத்த குடி மக்களுக்கும் கால நிலை செயற்பாடுகளின் ஊடான பல் வகைமையைக் குறைக்கும் செயற்பாட்டிலிருந்து இயைபாக்கம் வரை நிறுவனத்தினால் கையளிக்கப்படுகின்ற சேவைகள் பரந்து பட்ட வகைகளாகக் காணப்படுகின்றன. சுற்றாடல் நிபுணத்துவம் தொடர்பான வாடிக்கையாளர்களின் எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்றுகையில் அவ் இயக்கம், வணிக செயற்பாடுகள் மற்றும் கருத்திட்டங்களிற்கு உறுதுணையாகவிருத்தல் நிறுவனத்தின் குறிப்பான நோக்கமாகக் காணப்படும். அவ்வாறே, கால நிலை சவால்களுக்கு எதிராக இலங்கை அரசு மற்றும் தனியார்ப் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்ற ஒழுங்கு முறைச் செயற்பாடுகளுக்கு உதவி வழங்கிய வண்ணம் மிகப் பெரும் பங்களிப்பை வழங்கிய வண்ணம் செயற்படுகின்றது.

நிறுவனத்தினால் செயற்படுத்தப்பட்ட நீர் மின் மற்றும் சூரிய களங்களின் ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்த நிறுவனங்கள், இலங்கை காபன் பிரேரிப்புத் திட்டத்தின் கீழ் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட பல சந்தர்ப்பங்கள் கீழே முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது படங்களின் மூலம் சுட்டிக் காட்டப்படுவதுடன், கால நிலை மாற்றங்கள் தொடர்பாக நடாத்தப்பட்ட சொற் பொழிவுடன் தொடர்புடைய படம் நான்காவது படமாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

1



2

3

4

03. நிறுவனத்தின் பயணப் போக்

சேவைகள்

- பசுமை வீட்டு வாயு கணக்கெடுப்பு (ISO 14064 , ISO 14067)
- இலங்கை காபன் கடன் பிரேரிப்புத் திட்டம்
- சுத்தப்படுத்துகை மேம்படுத்துகை பொறிமுறை
- நிகர பூச்சிய (Net Zero Energy) வலுச் சக்தி சான்றுபடுத்துகை
- கால நிலை சாதகமான சான்றுபடுத்துகை (Climate Positive Certification)
- மதியுறை சேவைகள்
- கருத்திட்டங்கள் மற்றும் நிதி முகாமைத்துவக் கருத்திட்டங்கள்

2008
சுற்றாடல் அமைச்சின் கீழ் இலங்கை காபன் நிதியத்தை நிலை நாட்டுதல்.

2010
சுத்தப்படுத்துகை அபிவிருத்தி பொறிமுறை கருத்திட்டத்தை ஆரம்பித்தல்.

2013
இலங்கை காபன் கடன் பிரேரிப்பு செயன் முறையின் கீழ் கருத்திட்டங்களை ஆரம்பித்தல்.

2013
கால நிலை சார் கைத்தொழில்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக தன்னியக்க பசுமை வீட்டு வாயு அறிக்கையிடும் தராதரங்கள் மற்றும் தேவைகளை அறிமுகப்படுத்துதல்.

2016
இலங்கை கால நிலை நிதியம் எனும் பெயரில் வர்த்தகப் பெயரை மாற்றியமைத்தல்.

2016
இலங்கை காபன் தராதரத்தின் செயற்பாட்டுப் பொறிமுறையை மீ கட்டமைத்தல்.

2016
இலங்கை தராதர அங்கீகார சபையிடமிருந்து சபையினால் ISO 14065 எனும் தராதர அங்கீகார சான்றிதழை பெற்றுக் கொள்ளுதல்.

2018
கால நிலை மாற்றங்கள் தொடர்பா மூன்றாவது தேசிய தொடர்பாட செயற்பாட்டிற்கென தேசிய பசுை வீட்டு வாயுக்களை கணிப்பிடுத மற்றும் ஆவணப்படுத்தும் பொருட்டு மத்திய நிலையமாக செயற்படுதல்.

2020
நிகர பூச்சிய வலுச் சக்தியை உறுதிப்படுத்தும் மற்றும் காபன் நேரொத்த தொகுதியை அறிமுகப்படுத்துதல்.

04. சேவைகள்

பேண்தகு சுற்றுச் சூழலை உறுவமைக்கும் பொருட்டு முன்னெடுக்கப்படுகின்ற கருத்திட்டங்களின் உறுதித் தன்மை மற்றும் அங்கீகாரமாக்குதல் மற்றும் மதியுறை சேவைகளை செயற்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன. அதன் பிரகாரம், நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ள பிரதானமான சேவைகள் பின்வருமாறு,

1. பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு (ISO 14064 , ISO 14067)
2. இலங்கை காபன் கடன் பிரேரணைத் திட்டம் (SLCCS)
3. சுத்தப்படுத்துகை அபிவிருத்திப் பொறிமுறை (CDM)
4. நிகர பூச்சிய (Net Zero Energy) வலுச் சக்தி சான்றுபடுத்துகை
5. கால நிலை சாதகமான சான்றுபடுத்துகை (Climate Positive Certification)
6. மதியுறை சேவைகள்
7. கருத்திட்டங்கள் மற்றும் நிதி முகாமைத்துவக் கருத்திட்டங்களின் அறிமுகம்

4.1 பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு

இலங்கை கால நிலை நிதியத்தினால் அரச மற்றும் தனியார்ப் பிரிவு நிறுவனங்களுக்கு உள் நாட்டு ரீதியாகவும், வெளி நாட்டு ரீதியாகவும் ISO 14064–1 : 2018 மற்றும் ISO 14067 :2018 ஆகிய ஒத்தியல்பு சான்றிதழ்கள் கையளிக்கப்படுகின்றன. அந் நிறுவனங்களினால் கணிப்பிடப்பட்ட பசுமை வீட்டு வாயு உமிழ்வை சரி பார்த்த பிற்பாடு அச் சான்றிதழ்கள் கையளிக்கப்படுகின்றன. இலங்கை தராதர அங்கீகார சபையினால் மேற்குறித்த சரி பார்ப்பு செயற்பாடு தொடர்பாக நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் கணிப்பிடும் செயற்பாடுகள் வருடாந்தம் முன்னெடுக்கப்படுவதுடன், மூன்றாவது பங்குதார சரி பார்ப்பு செயற்பாட்டின் ஊடாக அந் நிறுவனங்களுடன் தொடர்புடைய தகவல்களுக்கு பெறுமதி கையளிக்கப்படுகின்றது. இதன் பிரகாரம், 2020 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பாக பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு பிரிவிற்கு 24 கருத்திட்ட இலக்குகள் கையளிக்கப்பட்டிருப்பினும், அவ் வருட கால கட்டத்தில் ஏற்பட்ட உலகலாவிய தொற்று நோய் நிலை அவ் இலக்குகளை நோக்கி நகரும் பயணத்திற்கு தங்கு தடையாகவமைந்துள்ளது. எனினும், நிகழ் நிலை வழி முறையின் ஊடாக சரி பார்ப்பு செயற்பாடுகள் தொடர்பாகத் தேவையான செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அதன் விருத்தி 2021 ஆம் ஆண்டில் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

4.1.1 பசுமை வீட்டு வாயு சரி பார்ப்புப் பிரிவின் வருடாந்த விருத்தி - 2020

தொடர் இலக்கம்	சேவை பங்காளியின் பெயர்	விருத்தி
பசுமை வீட்டு வாயு உமிழ்வு சரி பார்ப்பு - நிறுவன ரீதியான மட்டம்		
01	சிட்டிசன்ஸ் டிவொலப்மன்ட் நிதி நிறுவனம்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
02	பீபல்ஸ் இன்ஷுவரன்ஸ் PLC	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
03	தலவாக்கலை ரீ எஸ்டேட் PLC	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
04	பொக்வந்தலாவ ரீ எஸ்டேட் PLC	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது

05	கொமர்ஷல் வங்கி	40% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
பசுமை வீட்டு வாயு உமிழ்வு சரி பார்ப்பு - உற்பத்தி மட்டம்		
06	அமேசன் டிரேடின் தனியார் நிறுவனம்	80% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது

4.2 இலங்கை காபன் கடன் பிரேரணை திட்டம் (SLCCS)

இலங்கை காபன் கடன் பிரேரணை திட்டம் எனப்படுவது, இலங்கை கால நிலை நிதியத்தினால் சுற்றாடல் அமைச்சின் கால நிலை மாற்றப் பிரிவின் நேரடியான கண்காணிப்பின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தேசிய பசுமை வீட்டு வாயு கருத்திட்டத்தை அங்கீகரிக்கும் மற்றும் சரி பார்க்கும் நிகழ்ச்சித் திட்டமாகக் காணப்படுகின்றது. இப் பிரேரணை திட்டத்தின் மூலம் இலங்கையில் செயற்படக் கூடிய தகைமை பெற்ற காபன் முகாமைத்துவக் கருத்திட்டங்கள் பதிவு செய்யப்படுவதுடன், எதிர்ப்பார் பங்குதாரிகளுக்கு தரமுயர்ந்த சேவையை உறுதிப்படுத்திய இலங்கையின் பெயரீட்டை சான்றுபடுத்திய உமிழ்வு குறைப்பு (SCER) வெளியிடப்படுகின்றது.

2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு இலங்கை காபன் கடன் பிரேரிப்புத் திட்டத்தின் கீழ் ஐந்து புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி கருத்திட்டங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அவ் வருட காலப் பகுதியில் தனியார்ப் பிரிவிற்கு பல கருத்திட்டப் பிரேரிப்புகள் முன் வைக்கப்பட்டிருப்பினும், நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நோய் நிலை காரணமாக, அக் கருத்திட்டங்களை இலங்கை காபன் கடன் பிரேரிப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

4.3 சுத்தப்படுத்துகை விருத்தி பொறிமுறை (CDM)

இலங்கை கால நிலை நிதியத்தினால் புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி பயன்பாட்டின் ஊடாக பசுமை வீட்டு வாயு உமிழ்வைக் குறைப்பதற்கான சுத்தப்படுத்துகை பொறிமுறையைப் பயன்படுத்துவதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளும், வசதிகளை ஏற்பாடு செய்யும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

ஐக்கிய நாடுகளின் கால நிலை மாறுபாடுகள் தொடர்பான சட்டக கூட்டிணைப்பின் (UNFCCC) சுத்தப்படுத்துகை விருத்தி பொறிமுறையின் (CDM) கீழ் கருத்திட்டங்களை பதிவு செய்தல் மற்றும் சான்றுபடுத்தப்பட்ட வாயு உமிழ்வைக் குறைத்தல் (CER) சான்றிதழை வெளியிடும் பொருட்டு சான்றுபடுத்துதல் மற்றும் சரி பார்க்கை செயற்பாடுகளுடன் தொடர்புடைய வசதிகள் ஒழுங்கு செய்யப்படும். மேலும், இலங்கை கால நிலை நிதியத்தினால் கருத்திட்டத் திட்டங்கள் தொடர்பான ஆவணம் (PDD) மற்றும் மேற்பார்வை அறிக்கை (MR) ஆகியவற்றின் தயாரிப்பு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

4.3.1 சுத்தப்படுத்துகை விருத்தி பொறிமுறையின் வருடாந்த விருத்தி 2020

தொடர் இலக்கம்	கருத்திட்டத்தின் பெயர்	விருத்தி
சுத்தப்படுத்துகை விருத்தி பொறிமுறை		
01	இலங்கையிலுள்ள சிறு அளவிலான நீர் மின்வலு நிலையங்களில் சுத்தப்படுத்துகை விருத்தி பொறிமுறையின் கீழ் பதிவு செய்தல்	
1.1	காபன் வெளியகற்றுகை காலப் பகுதியை புதுப்பித்தல்	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
1.2	சான்றுபடுத்தப்பட்ட உமிழ்வு (மொத்த எண்ணிக்கை 74147 tCO2e) வெளியிடப்படுவதை கண்காணித்தல்	
1.3	ஐக்கிய நாடுகளின் கால நிலை மாற்றங்கள் தொடர்பான சட்டக கூட்டிணைப்பிற்கு (UNFCCC) மேற்பார்வை அறிக்கையை முன் வைத்தல், பகவந்தலாவ சிறு அளவிலான நீர் மின் வலு நிலையம் மஸ்கெலிய ஒய சிறு அளவிலான நீர் மின் வலு நிலையம் தபல ஒய சிறு அளவிலான நீர் மின் வலு நிலையம் மொரகம ஒய சிறு அளவிலான நீர் மின் வலு நிலையம் கொமலே ஒய சிறு அளவிலான நீர் மின் வலு நிலையம்	

4.4 நிகர பூச்சிய (Net Zero Energy) வலுச் சக்தி சான்றுபடுத்துகை

நிகர பூச்சிய வலுச் சக்தி கோட்பாடு எனப்படுவது, வலுக் சக்தி பயன்பாட்டின் மூலம் வலுச் சக்தி பாதுகாப்பின் வினைத் திறன் மற்றும் இடவமைப்பு புதுப்பிக்கத்தக்க தோற்றுவாய் ஆகிய செயற்பாடுகள் 100% பூர்த்தி செய்யப்பட்ட வலுச் சக்தி பயன்பாடாகக் காணப்படுகின்றது. வலுச் சக்தியை சான்றுபடுத்தும் தொகுதி, காபன் உமிழ்வைக் குறைத்தல், வலுச் சக்தி வினைத் திறன் தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல் மற்றும் நிறுவன ரீதியாக விளம்பரப்படுத்தும் நோக்கில் இலங்கை கால நிலை நிதியத்தினால் மேம்படுத்தப்பட்ட கோட்பாடாகக் காணப்படுகின்றது.

புதுப்பிக்க முடியாத வலுச் சக்தி பயன்பாட்டைத் தாண்டிய புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி உற்பத்தி கருத்திட்டங்களை முன்னெடுக்கின்ற நிறுவனங்கள் நிகர பூஜ்ஜிய வலுச் சக்தியை சான்றுபடுத்த வேண்டிய தேவை தொடர்பாகத் தகைமை பெறுகின்றன. இச் சான்றுபடுத்துகையில் பலன்கள் முறையே,

- வலுச் சக்தி பயன்பாட்டின் மூலம் ஏற்படக் கூடிய பசுமை வீட்டு வாயு உமிழ்வை, புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி பயன்பாட்டின் ஊடாக குறைக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தல்.
- நிறுவனங்களிற்கு, முதலீட்டாளர்களுக்கு மற்றும் பாவனையாளர்களுக்கு சுற்றாடல் நேயமிக்க கருத்திட்டங்களில் ஈடுபடுவதற்கு இட வசதிகளை ஏற்பாடு செய்தல்.
- வலுச் சக்தி பயன்பாடு குறித்த மட்டத்தைத் தாண்டிய வண்ணம் புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி உற்பத்தியில் ஈடுபடுகின்ற நிறுவனங்களிற்கு, அவர்களது மேலதிக வலுச் சக்தியை விற்பனை செய்து மேலதிக வருமானத்தை ஈட்டக் கூடிய வாய்ப்பு கிடைத்தல்.
- புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி பயன்பாட்டை விருத்தி செய்வதன் ஊடாக உற்பத்தி செலவைக் குறைத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு கிடைத்தல் மற்றும் அந் நிறுவனங்களிற்கு நீண்ட கால போட்டித் தன்மையுள்ள சந்தையில் தங்கியிருக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தல்.
- உயிரியல் எரிபொருளின் கீழ் தங்கியுள்ள வலுச் சக்தி, மிக விரைவாக மாற்றமடையக் கூடிய விலை மற்றும் விநியோகிப்புடன் கூட்டிணைந்த சந்தை வசதியுள்ள வலுச் சக்தியின் கீழ் தங்கியிருக்கும் செயற்பாடு குறைவடைதல்.
- நாட்டின் விருத்தி தொடர்பாக போட்டித் தன்மையுள்ள சுற்றாடல் உறுவாக்கப்படுதல் மற்றும் நீண்ட கால புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி கைத்தொழில் விஸ்தரிப்பு அதிகரித்தல்.

4.5 கால நிலை சாதகமான சான்றுபடுத்துகை

கால நிலை சாதகமான சான்றுபடுத்துகையின் ஊடாக திடமான பொருளாதார விருத்தியை பேணுவதற்கும், குறிப்பிடத்தக்களவான உமிழ்வைக் குறைப்பதன் ஊடக நீண்ட கால நன்னெறி மிக்க நிலைப்பாட்டை எட்டுவதற்கும் வழிகாட்டப்படுகின்றது. உற்பத்தி, சேவைகள் மற்றும் இயக்கங்களின் வருடாந்த பசுமை வீட்டு வாயு உமிழ்வை உறுதிப்படுத்துவதன் ஊடாக அவற்றின் பசுமை வீட்டு வாயு உமிழ்வு தொடர்பான பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய வாய்ப்பும் கிடைத்துள்ளது. மேலும். கால நிலை சாதகமான சான்றிதழை பெற்றுக் கொள்ளும் பொருட்டு நிறுவனத்தின் முன்னெடுப்பு செயற்பாடுகளின் உமிழ்வு தொடர்பாக வருடாந்த கூடியளவில் கவனம் செலுத்துவதன் ஊடாக அவர்களது வருடாந்த பசுமை வீட்டு வாயு உமிழ்வு மற்றும் சரி செய்கைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணம் மேலதிக அளவை விற்பனை செய்யக் கூடிய வாய்ப்பும் கிடைத்துள்ளது.

இச் சான்றுபடுத்துகை தொடர்பில் தேவையான பிரதானமான இசைவாக்கங்கள்

- எதிர்ப்பார் அளவியல் ரீதியான பசுமை வீட்டு வாயு உமிழ்வு சான்றிதழ் (ஏற்றுக் கொள்ளப்பட்ட மூன்றாம் தரப்பினரினால் சரி செய்யப்பட்ட).
- எதிர்ப்பார் தரப்பினரினால் காபன் முகாமைத்துவ கருத்திட்டம் விருத்தி செய்யப்படுதல் மற்றும் அவர்களது உமிழ்வைக் குறிக்கும் பொருட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச வாயு உமிழ்வு கருத்திட்டமயமாக்கம்.
- சான்று படுத்தப்பட்ட கருத்திட்டங்களை தன்னிச்சையாக செயற்படுத்த வேண்டியேற்படுதல்.
- எதிர்ப்பார் தரப்பினர் அவர்களது பசுமை வீட்டு வாயு உமிழ்வை மேலதிக கடனை காபன் தீர்த்தல் செயற்பாட்டுடன் கூட்டிணைந்த வகையில் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

கால நிலை சாதகமான சான்றுபடுத்துகை உரித்தான திடல்கள்

- வலுச் சக்தி அபிவிருத்தி
- புதிய வன வளர்ப்பு மற்றும் மீள் வன வளர்ப்பு
- வினைத் திறன் மிக்க வலுச் சக்தி மற்றும் பாதுகாப்பு
- சீரழிக்கப்படுவதைக் குறைத்தல், மீள் பயன்பாடு மற்றும் மீள் சுழற்சி

4.6 மதியுறை சேவைகள்

இலங்கை கால நிலை நிதியத்தினால் காபன் குறை பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பு பொருட்டு வாடிக்கைகளர்களுக்கு தீர்மானமெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களும், தலைமைத்துவமும் வகிக்கப்படுகின்றது. மேலும், தேசிய பசுமை அறிக்கையிடல் தொகுதியில் பதிவு செய்வதற்கும் தேவையான மதியுறை சேவைகள் வழங்கப்படுகின்றன.

தொடர் இலக்கம்	கருத்திட்டத்தின் பெயர்	விருத்தி
சாத்தியக் கூற்று ஆய்வு அறிக்கை		
01	பெருந் தோட்ட நிறுவனங்களினால் பராமரிக்கப்படுகின்ற எரிபொருளுக்கான மர நடுகையை, இலங்கை காபன் கடன் பிரேரிப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற சாத்தியக் கூற்று ஆய்வு	40% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது

4.7 கருத்திட்டங்கள் மற்றும் நிதி முகாமைத்துவ கருத்திட்டங்கள்

இலங்கை கால நிலை நிதியத்தினால் பல்வேறு சுற்றாடல் மற்றும் கால நிலை மாற்றங்களுடன் தொடர்புடைய கருத்திட்டங்கள் மற்றும் நிதியங்கள் முகாமைத்துவப்படுத்தப்படுகின்றன. அத்தகைய வகையிலான ஒரு சில கருத்திட்டங்கள் பின்வருமாறு,

- உலகலாவிய சுற்றாடல் வசதிகள் நிதியத்தினால் செயற்படுத்தப்பட்ட நவீன உயிரியல் வலுச் சக்தி தொழில்நுட்ப கருத்திட்டங்கள்
- பசுமை லங்கா கருத்திட்டம்
- தேசிய இயைபாக்கத் திட்டம்
- எதிர்ப்பார்க்கை தேசிய ரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு

இலங்கை கால நிலை நிதியத்தின் விசேட துறைகள்

- புதுப்பிக்கத்தக்க வலுச் சக்தி
- இயைபாக்கம் அல்லது குறைப்பதுடன் (Adaptation and Mitigation) தொடர்புடையதாக ஆலோசனைகளை வழங்குதல்
- சுற்றாடல் பொறியியல் மயமாக்கம்
- MRV தொகுதியின் மேம்படுத்துகை
- குடி மக்கள் விருத்தி
- சமூக ரீதியான ஆராய்ச்சிகள்

05. எதிர்ப்பார்க்கப்படுகின்ற நிதி இலக்குகள் - 2020



06. நிதி விருத்தி

2020 டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்த வாரான நிதி நிலைமைக் கூற்று

இலங்கை கால நிலை நிதியம் (தனியார்) நிறுவனம்
நிதி நிலைமைக் கூற்று
2020 டிசம்பர் 31

	குறிப்புகள்	2020 ரூபா	2019 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறையற்ற சொத்துக்கள்			
சொத்து வகைக் குறியீடு மற்றும் உபகரணங்கள்	**8**	**-**	9,679
நடை முறை சொத்துக்கள்			
வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய சொத்துக்கள்	**9**	**2,845,250**	1,872,353
பணம் மற்றும் பணத்திற்கு சமமான சொத்துக்கள்	**10**	**10,071,017**	12,860,892
		12,916,268	14,742,924
மொத்த சொத்துக்கள்		**12,916,268**	14,742,924
உரிமைகள் மற்றும் பொறுப்புகள்			
உரிமங்கள்			
கூறப்பட்ட மூலதனம்	**11**	**25,000,010**	25,000,010
தங்க வைத்த இலாபம் / நட்டம்		**(13,643,332)**	(12,872,076)
		11,356,678	12,127,934
நடைமுறையற்ற பொறுப்புகள்			
நடைமுறை பொறுப்புகள்			
நிதி முகாமைத்துவப் பொறுப்புகள்	**12**	**-**	1,193,000
திரட்டு கொடுப்பனவுகள்	**14**	**1,559,590**	1,421,990
		1,559,590	2,614,990
மொத்த உரிமைகள் மற்றும் பொறுப்புகள்		**12,916,268**	14,742,924

மேற்குறித்த நிதி நிலைமைக் கூற்று, கணக்கீட்டுக் கொள்கைகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டியிருப்பதுடன், நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இ ந் நிதிக் கூற்றுக்களில் பக்க இலக்கம் ...... முதல் .... வரை சமர்ப்பிக்கப்படுவதுடன், அவை இந் நிதிக் கூற்றுக்களில் ஒருங்கிணைந்த பகுதியொன்றாக வெளிக் காட்டப்பட்டுள்ளன.

2007 இன் இலக்கம் 07 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இந் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாக நான் சான்றுபடுத்துகின்றேன்.

....	....	....
முகாமையாளர் - ம.வ மற்றும் நிதி	பிரதம நிறைவேற்று அதிகாரி	தலைவர்

2007 இன் இலக்கம் 07 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம், இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து முன் வைக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபை வசப்படும்.

சபை சார்பாக அனுமதிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது.

....	....
பணிப்பாளர்	பணிப்பாளர்

2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருட காலப் பகுதியில் இருந்தவாரான விபரமான வருமானக் கூற்று

இலங்கை கால நிலை நிதியம் (தனியார்) நிறுவனம்
விபரமான வருமானக் கூற்று
2020 டிசம்பர் 31

	குறிப்புகள்	2020 ரூபா	2019 ரூபா
வருமானம்	1	**4,172,827.00**	14,703,949.00
கருத்திட்டங்களுடன் தொடர்புடைய நேரடி செலவு	2	**(310,222.22)**	(2,666,897.00)
நிகர இலாபம்		**3,862,604.78**	12,037,052.00
ஏனைய வருமானங்கள்	3	**864,863.64**	973,750.00
		4,727,468.42	13,010,802.00
குறைப்பு			
தனிப்பட்ட செலவு	4	**4,779,063.16**	4,758,045.00
நிர்வாக செலவு	5	**550,420.97**	1,273,354.00
விற்பனை மற்றும் விநியோகிப்பு செலவு	6	**4,160.49**	31,582.00
நிதி மற்றும் ஏனைய செலவுகள்	7	**165,080.00**	231,854.00
		5,498,724.62	6,294,835.00
இலாபம் (நட்டம்) வரிக்கு முந்திய		**(771,256.20)**	6,715,967.00
வரி		**-**	-
இலாபம் (நட்டம்) வரிக்கு பிற்பாடு		**(771,256.20)**	6,715,967.00
ஏனைய விஸ்தீரணமான வருமானம்		**-**	-
மொத்த விஸ்தீரணமான வருமானம்		**(771,256.20)**	6,715,967.00

2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியோட்ட கூற்று

இலங்கை கால நிலை நிதியம் (தனியார்) நிறுவனம்
நிதியோட்டக் கூற்று
2020 டிசம்பர் 31

	2020 ரூபா	2019 ரூபா
நிதியோட்டக் கூற்று - முன்னெடுப்பு செயற்பாடுகள்		
வரி செலுத்துவதற்கு முன்பான நிகர இலாபம் / நட்டம்	**(771,256.20)**	6,715,967.00
ஒப்பீடுகள்		
தேய்மானம்	**9,679.04**	22,623.00
முன்னைய ஆண்டின் ஒப்பீடுகள்	**-**	269,840.00
	(761,577.16)	7,008,430.00
செயற்பாட்டு மூலதனத்தின் மாறுபாடுகள்		
அதிகரிப்பு / (குறைப்பு) மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய நிதி	**(972,897.40)**	(1,092,902.00)
(அதிகரிப்பு) / குறைவடைதல் நிதி முகாமைத்துவ பொறுப்பு	**(1,193,000.00)**	(5,502,987.00)
(அதிகரிப்பு) / குறைத்தல் ஏனைய செலுத்த வேண்டியவை	**137,599.67**	466,250.00
	(2,028,297.73)	(6,129,639.00)
நிகர நிதியோட்டம் - முன்னெடுப்பு செயற்பாடுகளின் வாயிலாக	**(2,789,874.89)**	878,792.00
நிதியோட்டக் கூற்று - முதலீட்டு செயற்பாடுகள்		
நிலையான சொத்துக்களின் கொள்வனவு	**-**	(6,638.00)
நிகர நிதியோட்டம் - முதலீட்டு செயற்பாடுகள்		(6,638.00)
அதிகரிப்பு / (குறைப்பு) பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை	**(2,789,874.89)**	872,154.00
வருட ஆரம்பத்தில் காணப்பட்ட பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை	**12,860,892.00**	11,988,738.00
வருட இறுதியில் காணப்பட்ட பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை	**10,071,017.11**	12,860,892.00

2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிய நிதிக் கூற்று தொடர்பான விபரமான குறிப்பு

இலங்கை கால நிலை நிதியம் (தனியார்) நிறுவனம்
நிதிக் கூற்றுக்கள் தொடர்பான விபரமான குறிப்புகள் - 2020 டிசம்பர் 31

குறிப்புகள்		2020 ரூபா	2019 ரூபா
1	**வருமானம்**		
	பசுமை வீட்டு வாயு சரி பார்ப்பு வருமானம்	2,283,157.00	4,554,682.00
	மதியுறை சேவைகள் வருமானம்	533,000.00	3,000,000.00
	காபன் பூஜ்ஜிய கருத்திட்டங்களின் வருமானம்	200,000.00	100,000.00
	நிகர பூஜ்ஜிய சான்றிதழ் கருத்திட்டங்களின் வருமானம்	-	30,000.00
	பயிற்சி மற்றும் பணிப் பட்டறைகளின் மூலமான வருமானம்	-	-
	கருத்திட்ட முகாமைத்துவ வருமானம்	941,000.00	5,969,266.78
	இலங்கை காபன் கடன் பிரேரீப்பு செயன் முறை கருத்திட்டத்தின் வருமானம்	215,670.00	1,050,000.00
		4,172,827.00	14,703,948.78
2	**கருத்திட்டங்கள் தொடர்பான நேரடி செலவு**		
	பசுமை வீட்டு வாயு சரி செய்கை செலவு	92,222.00	484,966.56
	மதியுறை தொடர்பான செலவு	68,000.00	1,583,722.50
	சுத்தப்படுத்துகை அபிவிருத்தி பொறிமுறை தொடர்பான செலவு		
	பயிற்சி மற்றும் பணிப் பட்டறைகள் தொடர்பான செலவு		
	கருத்திட்ட முகாமைத்துவ செலவு		
	எஸ் எல் சீ எப் பிற செலவுகள்		4,645.00
	இலங்கை தராதர அங்கீகார சபை தொடர்பான செலவுகள்	150,000.00	564,657.52
	இலங்கை காபன் கடன் பிரேரணை செயன் முறையின் கீழான கருத்திட்டங்களின் செலவு		28,905.00
		310,222.00	2,666,896.58

3	**பிற செலவுகள்**	864,864.00	973,749.99
	வட்டி வருமானம்	864,864.00	973,749.99
4	**தனி நபர் செலவு**		
	ஊழியர் சம்பளம்	4,060,400.00	4,114,173.99
	ஊழியர் சேமலாப நிதியம்	434,400.00	37,800.00
	சம்பளக் கொடுப்பனவு	134,349.00	119,766.30
	பணி நன்கொடை செலவு	-	-
	ஊழியர் சேமலாப நிதியம்	108,600.00	-
	தொலைபேசி மற்றும் இணைய வசதி தொடர்பான செலவு	-	-
	ஊழியர் நலன்புரி	21,714.00	56,373.48
	ஊழியர் பயிற்சி செலவுகள்	-	35,654.94
	எரிபொருள் செலவுகள்	-	
		4,759,463.00	4,758,045.00
5	**நிர்வாக செலவுகள்**		
	செயலாளர் கட்டணம்	58,971.00	110,075.75
	கணக்காய்வு கட்டணம்	-	37,500.00
	நட்ட ஈட்டு பணத் தொகை	-	200,000.00
	வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவுகள்	223,545.00	387,653.89
	பராமரிப்பு செலவுகள்	-	5,250.00
	தொலைபேசி கட்டணம்	147,904.00	173,369.54
	கணினி பராமரிப்பு செலவுகள்	19,960.00	27,500.00
	அச்சிடல் மற்றும் காகிதாதிகள் செலவு	850.00	96,380.00
	காப்புறுதி கட்டணம் - மோட்டார் வாகனம்	56,880.00	55,527.83
	தேய்மானம்	9,679.00	22,623.33
	சட்ட ரீதியான கட்டணம்	-	

	காப்புறுதி கட்டணம் - மோட்டார் சைக்கில்	-	
	இணைய தளத்திற்கான செலவுகள்	20,150.00	10,950.00
	தபால் மற்றும் முத்திரைக் கட்டணம்	-	5,000.00
	பயணச் செலவு	2,083.00	5,714.97
	குழுக்கள் தொடர்பான செலவுகள்	30,000.00	105,809.00
		570,022.00	1,243,354.31
6	**விற்பனை மற்றும் விநியோகிப்பு செலவு**		
	விளம்பரப்படுத்துகை செலவுகள்	4,160.00	30,532.00
	விற்பனை விஸ்தரிப்பு செலவுகள்	-	1,050.00
		4,160.00	31,582.00
7	**நிதி மற்றும் பிற செலவுகள்**		
	ஊழியர் சேமலாப நிதியத்தின் அபராதம்	1,890.00	779.92
	வங்கிக் கட்டணம்	3,615.00	3,525.00
	பிற செலவுகள்	159,575.00	257,549.34
		165,080.00	261,854.26

இலங்கை கால நிலை நிதியம் (தனியார்) நிறுவனம்

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான விபரமான குறிப்புகள்

2020 டிசம்பர் 31

குறிப்புகள்

8 ஆதனம் விபரக் குறிப்புகள் உபகரணங்கள்

சொத்துக்கள்

	குளிர் பதனாக்கி இயந்திரங்கள்	ஒட்டுகை இயந்திரம் / பைண்டின் இயந்திரம்	கணினி மற்றும் அச்சிடல் இயந்திரம்	தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்	மோட்டார் வாகனம்	அலுவலக உபகரணங்கள்	மோட்டார் சைக்கில்	திரைச் சீலைகள்	மொத்த சொத்துக்கள்
	ரூபா சதம்	ரூபா சதம்	ரூபா சதம்	ரூபா சதம்	ரூபா சதம்	ரூபா சதம்	ரூபா சதம்	ரூபா சதம்	ரூபா சதம்
செலவு									
2021.01.01 ஆம் திகதியிலிருந்த மீதி	209,000.00	7,000.00	1,223,800.00	525,635.38	3,100,000.00	55,000.00	199,640.00	46,410.00	**5,366,485.00**
ஒன்று சேர்க்கை			-						-
2021.01.31 ஆம் திகதியிலிருந்த மீதி	209,000.00	7,000.00	1,348,800.00	525,635.00	3,100,000.00	55,000.00	199,640.00	46,410.00	**5,366,485.00**
முழு மொத்த தேய்மானம்									
2021.01.01 ஆம் திகதியிலிருந்த மீதி	209,000.00	7,000.00	1,223,800.00	525,635.38	3,100,000.00	45,320.96	199,640.00	46,410.00	**5,356,806.34**
வருடாந்த தேய்மானம்			-			9,679.04			**27,344.00**
2021.01.31 ஆம் திகதியிலிருந்த மீதி	209,000.00	7,000.00	1,251,144.00	525,635.00	3,100,000.00	55,000.00	199,640.00	46,410.00	**5,366,485.38**
2021.12.31 ஆம் திகதிக்கு முன் கொண்டு வந்த மீதி	-	-	-	-	-	9,679.04	-	-	**9,679.04**

இலங்கை காலநிலை நிதியம் தனியார் கம்பனியின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் கண்காணிப்புத் தேவை தொடர்பில் 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரமான கணக்காய்வு அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனியின் 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் ஆகியன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் காலத்தில் எனது அறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் மூலமான தாக்கங்களைத் தவிர்த்து, கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் வாயிலாக 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும், காசுப் பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும், நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) விபரமான வருமானக் கூற்றினுள் 2020 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான கணக்காய்வுக் கட்டணம் குறிப்பிடப்படாதிருப்பினும், செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணமான ரூபா 150,000 ஆன தொகை நடைமுறையற்ற பொறுப்பாக நிதி நிலைமைக் கூற்றினுள் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) 2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய மீதி ரூபா 2,662,479 ஆகக் காணப்பட்டாலும், கிடைக்க வேண்டிய மீதி காலப் பகுப்பாய்வின் பிரகாரம் ரூபா 2,593,632 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 68,847 ஆன மாற்றம் அவதானிக்கப்பட்டாலும் அதற்கான காரணம் கணக்காய்வுக்கு முன் வைக்கப்படவில்லை.

(இ) நடைமுறையற்ற சொத்துக்களினுள் உள்ளடங்குகின்ற ரூபா 5,311,485 பெறுமதியான சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் முற்று முழுதாக தேய்வுக்குட்படுத்தப்பட்டிருப்பினும், அச் சொத்துக்களின் மீள் பெறுமதியை கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு தேவையான ஒப்பீடுகளை கணக்குகளில் சுட்டிக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சிறு மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகங்களுடன் தொடர்புடைய கணக்கீட்டுத் தராதர இலக்கம் 17 இன் 3.1 (b), (c), (d) பந்திகளின் பிரகாரம், வாகனங்களுடன் தொடர்புடையதாக தேய்வுக் கொள்கையொன்று முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கம்பனியின் வருமானமாக ரூபா 4,172,827 குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அதன் ஒவ்வொரு வருமான வகுதிகளுடனும் தொடர்புடையதாக கணக்காய்வுக்கு முன் வைக்கப்பட்ட விபரமான ஆவணத்தைப் பரீட்சிக்கையில் தொடர்புடைய வகுதிகளின் பெறுமதி மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளிடையே ரூபா 1,965,047 ஆன மாறுபாடு காணப்படுவதாக அவதானிக்கப்பட்டாலும், தொடர்புடைய மாற்றத்துக்கான காரணம் கணக்காய்வுக்கு முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சிறு மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகங்களுக்கான கணக்கீட்டுத் தராதர இலக்கம் 28.3 (a) இன் பிரகாரம் கம்பனியினால் ஊழியர்களுக்கென பணி நன்கொடை தொடர்பாக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) சிறு மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகங்களுக்கான கணக்கீட்டு தராதர இலக்கம் 4.4 ஆவது பிரிவின் பிரகாரம் ரூபா 10,000,000 ஆன நிலையான வைப்புகள் நடைமுறையற்ற சொத்துக்களாக சுட்டிக் காட்டப்பட வேண்டியிருப்பினும், அவை நடைமுறை சொத்துக்களின் கீழ் பணம் மற்றும் பணத்துக்குச் சமனானவற்றின் கீழ் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்குத் தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புகளின் கீழ் சுட்டிக் காட்டப்பட்டிருந்த ஏனைய செலுத்த வேண்டிய மீதி, 2020 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து முன் கொண்டு செல்லப்படுகையில் அது ரூபா 394,276 ஆக குறித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் அதற்குறிய குறிப்புகள் சீராக கணக்காய்வுக்கு முன் வைக்கப்படவில்லை. கணக்காய்வுக்கு முன் வைக்கப்பட்டிருந்த பக்கம் 09 மற்றும் குறிப்பு இலக்கமின்றி முன் வைக்கப்பட்டிருந்த குறிப்பொன்றில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமதி ஏனைய குறிப்புகளுடன் பொருந்தாதிருப்பதுடன், சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 4,194,479 சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன், மீண்டும் தனி நபர் செலவாக ரூபா 4,779,063 குறித்துக் காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக் கூற்று குறிப்புகள் சரியாகக் காணப்படுவதில்லையென அவதானிக்கப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இல.கண.நிய) இசைவாக எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புகள் இவ் அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள் எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 கம்பனியின் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள ஏனைய தகவல்கள்

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பிற்பாடு எனக்கு கையளிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்ற கம்பனியின் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டபட்டுள்ள எனினும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள், ஏனைய தகவல்கள் எனக் கருதப்படும். இவ் ஏனைய தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்பு கூற வேண்டியுள்ளது.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாதிருப்பதுடன், அது தொடர்பாக நான் எவ்விதத்திலும்

சான்றுபடுத்துகையையோ அல்லது முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்தையோ முன் வைக்கமாட்டேன்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வுடன் தொடர்புடையதாக எனது பொறுப்பாக மேற்குறித்த அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தில் வாசித்தல் மற்றும் அத்தகைய அடிப்படையில் செயற்படுகையில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது ஏனைய விதமாக பெறப்பட்ட எனது அறிவின் பிரகாரம் போதியளவில் பொருந்தாதிருக்கின்றதா என்பதைக் கருத்திலெடுப்பதாகவுள்ளது.

கம்பனியின் 2020 வருடாந்த அறிக்கையை வாசிக்கையில், அதன் பெறுமதி ரீதியான பிழைகள் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதாக நான கருதுமிடத்து, சரிப்படுத்தல்கள் தொடர்பாக நிர்வகிக்கின்ற தரப்பினருடன் அவ் விடயங்களை பரிமாறிக் கொள்ள வேண்டியுள்ளது. மேலும் சரி செய்யப்படாத பிழையாகக் குறிப்பிடப்பட்ட விடயங்கள் காணப்படுமாயின், அவை அரசியலமைப்பின் 154 (6) சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் காலப் பகுதியில் என்னால் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும், அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிக செயற்பாடுகள் தொடர்பான கணக்கீட்டுத் தராதரங்களின் பிரகாரம் தயாரித்து சரியாகவும், நியாயமானதாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன் முறையைப் பரீட்சிக்கும் பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பாகக் காணப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக சீராக பதிவேடுகளையும், அறிக்கைகளையும் பராமரிக்க வேண்டியுள்ளது.

1.5 நிதிக் கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதும், எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாகக் காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பெரும்பாண்மையான பிறழ் கூற்றுக்கள் காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை

மோசடி அல்லது தவறு காரணமாக எழக் கூடுமென்பதுடன் அவற்றுள் இந் நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித் தனியாகவோ அல்லது கூட்டு மொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக் கூடுமென நியாயமாக எதிர்ப்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர் தொழில் தீர்ப்புகளுடனும், தொழிற் சார் ஐயப்பாடுடனும் செயற்பட்டேன். மேலும் என்னால்,

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வுக் கோட்பாட்டுக்கான அடிப்படையை இனங் காணுகையில் மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களிற்கு ஏற்படக் கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங் கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர் கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்ளுதல், மோசடியானது கூட்டுச் சதி, கள்ளத் தனம், வேண்டுமென்று விட்டி விடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டிபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற் திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பாகவும் குறிப்பிடத்தக்க ஐயப்பாடிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவில் காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்க்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக் குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடை நிறுத்துவதற்கு ஏதுவாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட மிக முக்கியமான கணக்காய்வுக் கண்டறிவுகள், பிரதான உள்ளக நிர்வாகக் குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வாகத் தரப்பினரை அறிவூட்டுகின்றேன்.

2. ஏனைய சட்ட திட்டங்கள் மற்றும் கண்காணிப்புத் தேவைகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழும், 2007 இன் இலக்கம் 7 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் கீழும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் தொடர்பாக மிக முக்கியமான ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 2007 இன் இலக்கம் 7 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் 163 (2) பிரிவிலும், 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவிலும் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், இவ் அறிக்கையின் 1.2 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கு உட்பட்டதாக கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களும், விளக்கப்படுத்துகைகளும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரீட்சிப்பின் மூலம் அடையாளம் காணப்பட்ட விடயங்களின் பிரகாரம் கணக்காய்வு அறிக்கைகளை நிறுவனம் சீராகப் பேணியிருந்தது.

2.1.2 நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள், 2007 இன் இலக்கம் 07 ஐ உடைய கம்பனிகள் சட்டத்தின் 151 ஆவது பிரிவின் கீழான தேவைகளின் பிரகாரம் அமைந்துள்ளன.

2.1.3 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் பொருந்துகின்றன.

2.1.4 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iv) ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பிரிவின் கீழான 1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர முன்னைய ஆண்டில் என்னால் முன் வைக்கப்பட்ட சிபாரிசுகள் முன் வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயன் முறைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட அத்தாட்சிகளின் பிரகாரமும், போதியளவான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை முன் வைப்பதற்குப் போதியளவான விடயங்கள் எனது கண்காணிப்பிற்கு உள்ளாகவில்லை.

2.2.1 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கம்பனியின் நிர்வாக சபையின் ஏதாவதொரு அங்கத்தவரொருவருக்கு நிறுவனத்துடன் தொடர்புபட்டு ஏதாவதொரு ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது எந்தவொரு பிற அடிப்படையிலும் சாதாரண வர்த்தக நடவடிக்கைகளுக்குப் புறம்பாக தொடர்பு காணப்படுவதாக.

2.2.2 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர ஏதாவதொரு தொடர்புடைய எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட பிரிதொரு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு ஒத்திசையாகாத அடிப்படையில் செயற்பட்டிருப்பதாக.

சட்ட திட்டங்கள் / ஆணைகளினது குறிப்பு	அவதானிப்புகள்
(அ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கை	

(i)	வழிகாட்டிக் கோவையின் இலக்கம் 3.1 (i) ஆம் பிரிவு	2022 செப்டம்பர் 08 ஆம் திகதி வரை, நிறுவனத்தின் ஆட் சேர்ப்பு நடைமுறை அல்லது பதவியணி ஆகியவை அங்கீகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ii)	வழிகாட்டிக் கோவையின் இலக்கம் 4.2 ஆம் பிரிவு	2019 ஜனவரி 12 ஆம் திகதியை முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இலக்கம் DMA/01-2019 பயன்படுத்தப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் உள்ளடக்கம் அமைக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை நியமிப்பதுடன் தொடர்புடைய கடிதத்தின் பிரகாரம் குழு அங்கத்தவர்கள், அவதானிப்பாளர்கள் மற்றும் குழு குழு அழைப்பாளர் தொடர்பான விபரங்கள் விபரமாக சுட்டிக் காட்டப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின் பிரகாரம் கம்பனியின் அதிகாரங்கள், செயற் பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இசைவாகாத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக.

2.2.4 2018 இன் இலக்கம் 19 ஐ உடைய தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் கம்பனியின் வளங்களை மிகச் சிக்கனமாகவும், வினைத் திறன் மிக்கதாகவும் மற்றும் முனைப்புடனும் குறித்த காலப் பகுதிகளில் தொடர்புடைய சட்ட திட்டங்களுக்கு ஏற்ப பெறுகை செயற்பாடு நடைமுறை பின்பற்றப்பட்டு பயன்படுத்தப்படவில்லையென.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) 2007 மே 24 ஆம் திகதிய இலக்கம் 14/2007 ஐ உடைய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 3 (1) (ஆ) பந்தியின் பிரகாரம், நிதியத்தை நிறுவுவதற்கான நடைமுறை வழிகாட்டி வரைவுபடுத்தப்பட்டு அமைச்சரவைக்கு முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை காபன் நிதியம் தனியார் நிறுவனம் எனும் பெயரில் ரூபா 25 மில்லியன் பணத் தொகை தொடர்பாக சாதாரண பங்குடையை மூலதனமாக 2011 டிசம்பர் 31 ஆம் திகதி திறைசேரி செயலாளரின் பெயரில் பங்குச் சான்றிதழ் வெளியிடப்பட்டிருக்கவில்லை. 2015 ஜனவரி 16 ஆம் திகதி கம்பனியின் பெயர் இலங்கை காலநிலை நிதியம் தனியார் நிறுவனம் என மாற்றப்பட்டிருப்பினும், பங்குச் சான்றிதழ் இலங்கை காபன் நிதியம் தனியார் நிறுவனம் எனும் பெயரில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(இ) இலங்கை வங்கி கணக்குடன் தொடர்புடையதாக 2019 ஆம் ஆண்டிலிருந்து நடப்பில் ரூபா 362,036 பெறுமதி காணப்பட்டாலும், மாற்றப்படாத காசோலைகளுடன் தொடர்புடைய பெறுமதியை வருமானமாக வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

டப்ளியு. பீ. சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி